# சீவகனின் பல்கலை புலமை

# Sivaganin Palkalai Pulamai

***முனைவர் ஸ்ரீ. ஸ்ரீ ஜெயந்தி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பூசாகோ கிருஷ்ணாம்மாள் மகளிர் கல்லூரி
கோயம்பத்தூர்

**ஆய்வுச் சுருக்கம்**

*கலை என்பது மனித நாகரிகத்தின் உச்சம்.பழந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பு கலைகயை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சி வெறும் பாடல்களைப் பற்றியது மட்டுமன்று. பண்பாட்டோடு இணைந்த கலையைப் பற்றியதாகும் அக்காலத்தில் வீரம், காதல், சிறப்பு, பெருமை, புகழ் ஆகியவைகளில் மனிதன் கொண்ட பல்வேறு நிலைகளே கலைவடிவங்கள் ஆகியுள்ளன. காப்பியத் தலைவன் சாதாரண மனிதனைக் காட்டிலும், உயர்ந்தவனாக, சீரியோனாக, மிகையாற்றல் உடையவனாகக் காட்டப்படுகின்றான். பல்வேறு கலைகளிலும் சிறந்து விளங்கி தனக்கு நிகர் தானே எனும்படியான தலைவனையே பெரும்பான்மையான காப்பியங்கள் காட்டுகின்றன. காப்பிய மாந்தரின் இக்கலை அறிவே கதைப்போகிற்கு உறுதுணை செய்கின்றன.*

***முக்கியச் சொற்கள்:***

*சீவகசிந்தாமணி, இசைக்கலை, கலை, காப்பியம், மருத்துவக்கலை, ஓவியக்கலை*

**Dr. S. Srijayanthi**
*Assistant Professor, Tamil Department*
*P.S.G.R Krishnammal College for Women*
*Coimbatore*

**Abstract**

*Art is the pinnacle of human civilization. It is based on the special art of ancient Tamil literature. Research on literature is not just about songs. It is about art combined with culture. The protagonist of the epic is shown to be superior, more serious, and more exaggerated than the ordinary man. The majority of epics show a leader who excels in various arts and is himself a netizen. Knowledge of the art of the 'Kappiya Mandar' contributes to the storytelling.*

***Keywords:***

*Sivakasinthamani, Music, Art, Epic, Medicine, Painting*

**Citation**

Srijayanthi, S. "Sivaganin Palkalai Pulamai." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 46–51.

*எல்லாக் கலைகளிலும் சிறந்தவனே காவியத்தலைமை ஏற்பதற்குத் தகுதி யானவன் என்பதை தன்னேரில்லாத தலைவனை உடைத்தாய் என்ற வரியில் உரைக்கின்றது.தண்டியலங்காரம்.தமிழில் தோன்றிய ஐம்பெரும்காப்பியங்களில் இவ்வரிக்குப் பொருத்தமான தலைவனைக் கண்டு கொண்டுள்ளது.சீவகசிந்தாமணியே எனில் மிகையில்லை. அக்காப்பியத்தின் கதைத் தலைவனான சீவகன் எட்டுப்பெண்களை மணந்ததைச் சற்று உற்றுநோக்கும் போது அவனது கலை அறிவே அவதற்குக் காரணமாக அமைவதுதை மறுக்கஇயலாது. சீவகனின் சிறப்பு*

***“கலையின் தகலமும் காட்சிக் கின்பமும்***
***சிலையின் தகலமும் வீணைச் செல்வமும்***
***மலையினி னகலிய மார்ப னல்லதிவ்***
***வுலகிலி லிலையென வொருவனாயினான்”*** *(பா 411)*

*என்ற பாடலின் மூலம் முழுவதும் பெறப்படுகிறது. இசைக்கலை, ஒவியக்கலை, மருத்துவக் கலை, மந்திரக்கலை,போர்கலை, ஒப்பனைக் கலை, சுண்ணப்பொடி ஆயும் திறன் என்னும் தலைபப்புக்ளை முன்வைத்து சீவகனின் பல்கலைபுலமையை இக்கட்டுரை அமைகிறது.*

**இசைக்கலை**

*இசையினை நாவினுள் அமிர்தம் என்றுக் குறிப்பிடுகின்றார்.திருத்தக்கதேவர் (504) கூத்து, பாடல் முடிவு யாழ் இவற்றின் ஒலி நாள்தோறும் ஒலித்துக் கொண்டிருந்ததாக இராமாபுரம் (583) வர்ணிக்கப்படுகிறது. மனைகளிலும் சேரிப் பகுதிகளிலும் குழலிசையும், பண்ணிசையும், பாட்டிசையும் ஒலிக்கின்றன. (118) வெள்ளிமலை அருகில் உள்ள நகரத்திலும் இவ்விசைகள் ஒலித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.(530) சீவகன்,பண்ணினுக்கு அரசன் எனச்சிறப்பிக்கப்படுகிறன்ரறான். அவன் “தேவகீத”மும் (2052) “சாமகீத”மும் (2038) இசைக்கின்றான். சீவகனின் யாழிசையும் மிடற்றுப் பாடலும் ஒன்றுபோல் இருந்தன (738) “இசைக்கலையின் நிறைந்த இனிய மொழியாய்” எனத் தத்தை வர்ணிக்கப்படுகிறாள் (732) அவளது பாடல் “மாமதுரகீத”மாக இனிக்கிறது. தத்தை இசை மரபில் கூறப்பட்டுள்ள முறைப்படி அதாவது புருவம், நெற்றியில் ஏறாமல், கண்கள் ஆடாமல், மிடறு வீங்காது பற்கள் வெளியில் தெரியாமல் (658) பாடுகிறாா். தத்தை பாடிய இசையில் “கின்னர மிதுனம்” என்னும் பறவைகள் (இசையறிவிற் சிறந்த ஆணும் பெண்ணுமான இரட்டைகப் பறவைகள்) தம்மை மறந்த நிலத்திடை வீழ்ந்தன. இசைத்திறம் போற்றப்படுகிறது பாடல் மகளிர் இருந்துள்ளனர் (2118)*

*காந்தருவதத்தையார் இலம்பகத்தில் சீவகன் தன் கையில் பொறுத்தயாழைக் கண்டதும், நன்கு ஆராய்ந்து அது குற்றம் உடையது என்பதை அறிந்து கொண்டான் நீண்ட நாள் நீரில் ஊறியிருந்தஅழுகிய மரத்தால் செய்யப்பட்டயாழ் வாளால் வெட்டுற்றயாழ் இடியினால் தாக்குண்ட மரத்தினால் செய்யப்பட்டயாழ், முல்லை நிலத்திலேஉழவராற் சுடப்பட்டுச் செய்யப் பட்டயாழ் என அனைத்தையும் ஒதுக்கி இறுதியில் அனைத்து நலன்களையும் கொண்டயாழ் ஒன்றைத் தேர்வு செய்கிறான் சீவகனின் இசையாற்றலையும் இசைக் கருவி பற்றிய அறிவையும் (716 -721) வரை உள்ள பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.சீவகனின் அவ்யாழைக்கொண்டே காந்தருவதத்தையார் யாழ்ப்போட்டியில் வென்றதை,*

***“பண்ணொன்று பாடலது வொன்று பல்வளைக்கை***
***மண்ணொன்று மெல்விரலும் வாள் நரம்பின் மேல்நடவா***

***விண்ணின் றியங்கிமிடறு நடுநடுங்கி***
***எண்ணின்றி மாதர் இசை தோற்றிருந்தனளே"*** *(பா 735)*

*என்னும் பாடலின் விரித்துரைத்துள்ளார் திருத்தக்க தேவர்.*

*சுரமஞ்சரியார் இலம்பகம் ஆண்களையே பாராமல் இருந்த சுரமஞ்சரியைசீவகன் இசைபாடிக் கவர்ந்தான் என்பதும் சீவகன் இசைக்கு மயங்கி பறவை போல் வேடன் கத்தும் ஓசையை கேட்டு ஓடி வரும் மயில்கள் போல சீவகன் இசைக்கு மயங்கி பெண்கள் ஓடி வந்தனர் என்பதும் அறியலாகிறது.*

***"கள்ளர் மூப்பி னந்த ணன்க கனிந்து கீத வழியே***
***வள்ளி வென்ற நுண்ணிடைம ழைம லர்ந்த டங்கணார்***
***புள்ளு வம்ம திம கன்பு ணர்த்த வோசை மேற்புகன்***
***னுள்ளம் வைத்தமாம யிற்குழாத்தினோடி யெய்தினார்"*** *(பா 20-39)*

**ஓவியக்கலை**

*சீத்தலை சாத்தனாரைப் போன்று திருத்தக்கத் தேவரும் தனது சிந்தாமணியில் தக்க நாட்டிலே அங்கங்கே தாமரைப் பூக்களும், இதன் இலைகளும் அடர்ந்தக் குளங்களில் இருந்தன. அக்காட்சி ஓவியக் கலைஞர் துணியில் எழுதிய தாமரைக் குளத்தின் காட்சிப் போல இருந்தது என்பதை,*

***"படம் புனைந்தெழுதிய வடிவில் பங்கயத்***
***தடம்பல தழீஇயது தக்க நாடு"***
***என்னும் அடிகளின் மூலம் அறியலாம.***

*துணியில் எழுதப்பட்ட ஓவியங்கள் நாளடைவில் பலகைகளிலும் எழுதப்பட்டன. மேலும் கிழி என்று அழைக்கப்படுகின்றக் கித்தான் துணியில் சித்திரங்கள் எழுதப் பட்டன. அதுபோல் நவரசங்களையும் (மெய்ப்பாடுகள்) தம்முடைய மன ஓவியங்களில் புலப்படுத்தி எழுதியதை, கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டான்*

***"தீட்டினான் கிழிமிசைத் திலகவாள்நுதல்***
***வேட்டைமால் களிற்றின் முன்வெருவி நின்றதோர்***
***நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே"***

*என்ற செய்யுளில் மகத நாட்டு வீதியிலே குணமாலை என்னும் பெண்மணி சென்றுக் கொண்டிருந்தபோது மதங் கொண்ட பட்டத்து யானை திடீரென்று அவளுக்கு எதிரே வந்து விட்டது அதனைக்கண்டு அவள் திடுக்கிட்டு அஞ்சி உடல் நடுங்கி செய்வது அறியாமல் நின்றுவிட்டார். அவ்வழியே வந்த சீவகன் யானையை அடக்கி அச்சத்தோடு நடுங்கிக் கொண்டிருந்த அவளின் முகத்தைக் கண்டான். இந்த அச்சமெய்ப்பாடு அவன் மனதில் பதிந்து விட்டது. அதை வண்ணங்களைக் குழைத்து கிழியின் மேல் தான் கண்ட முகத்தை மெய்ப்பாடு தோன்ற ஓவியம் வரைந்தான் என்பதை திருத்தக்கத்தேவர் தம்முடைய காவியத்தில் கூறுகிறார்.*

**மருத்துவக்கலை**

*பதுமையைப் பாம்பு தீண்டியவுடன் சீதமண்டலி, இராசமாநாகம், நாகப்பாம்பு என்ற வகையினையும் பார்ப்பனப்பாம்பு அரசப்பாம்பு, வணிகப்பாம்பு சூத்திரப் பாம்பு என்ற வேறொரு வகையினையும் கூறி அவற்றின் விடநிலைகளையும் விளக்குகிறார் ஆசிரியர். பின் முதலுதவியாக சிருங்கியை (சுக்கு போன்றது) கையிரண்டு, காலிரண்டு நெற்றியிலும் பூச வேண்டும் என்னும் குறிப்பும் பெறப்படுகின்றது. சூரிய கிரகணம் ஏற்படும் நாளில் பாம்பு தீண்டினால் இறைவனாலும் அவ்விடத்தைப் போக்க இயலாது என்னும் உண்மையையும் இப்பகுதியில் அறியமுடிகின்றத. பாம்பின் மேல்வாயிலேயுள்ள தட்டம், அதட்டம் என்னும் எயிறுகளில் கடித்தால் உயிரை உண்ணும், ஒழிந்த எயிறுகளில் கடித்தால் வருத்தம் மட்டுமே உண்டாகும் என்பதையும் இப்பகுதியில் கூறுகிறது காளி காளாத்திரி, யமன், யமதூதி என்னும் நான்கு பற்களும் யமதூதி ஒழிந்த மூன்று பற்கள் அழுந்தியுள்ளதால் இவளைக் காப்பாற்றுதல் இயலும் எனக்கூறி பஞ்சநமஸ்காரம் என்னும் மந்திரத்தைக் கூறி சீவகன் அவளை உயிர்ப்பித்த செய்தி*

"............................

***நீள்கடற் பிறந்த கோலக்***

***கடுங்கதிர்க் கனலி கோப்பக் காரிரு ளுடைந்த தேபோ***

***லுடம்பிடை நஞ்சு நீங்கி' (பா 1290)***

*என்ற வரிகளில் விளக்கப்படுகின்றது. மருத்துவ அறிவு என்பதன் பின் உள்ள இயற்கை சார்ந்த அத்துனை அறிவும் சீவகன் பெற்றிருந்தான் என்னும் உண்மை நமக்கு விளங்குகிறது.*

**மந்திரக் கலை**

*சீவகன் அஃறினை உயிர்களின் மொழி யறிந்தவன் என்பதற்கு இம்மந்திரதக்கலை சான்றாக அமைகின்றது. சீவகன் 1.தட்டனுக்கு குதிரையை விரைந்து செலுத்தும் மந்திரம் 2.வேண்டுமிடத்தே நிறுத்தும் மந்திரம் (பா.792) என்னும் வீரமந்திரத்தைக் கற்பித்துக் குதிரையின் காதில் ஓதச் செய்கிறான். அந்தணன் பிடியிலிருந்து நாயை காத்த சீவகன் அதில் காதில் ஐம்பதங்கல்எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுகிறான், உடனே அவ்வுடம்பு நீங்கி சுய உருவான சுதஞ்சணன் என்னும் வானவன் வடிவை அடைகிறான். (பா . 951) பின்பு அவனேசீவகனுக்கு 1. வேற்றுரு எய்த்ல் 2.விடம் நீக்கல் 3. இனிய குரலை பெறல் என்னும் மூன்று மந்திரங்களை அளிக்கிறான்.*

*மத்திம நாட்டில் உள்ள பதுமபுறத்தில் வாழ்கின்ற பாவத்தனைப் பிரிந்து அவனது மனைவியை மீண்டும் பெற சீவகன் அவனுக்கு மந்திரத்தை அளிக்கிறார்.இம் மந்திரத்தை ஓதி நீ ஒறு இரவில் ஏ அளவு அனைய எல்லை சென்றால் இயங்கிக் கொண்டிருந்தருலளு (பா.1600) என்றான்அவ்வாறே நடக்க மகிழ்வு கொண்டான் இவ்வாறாக சீவகன் மந்திரக் கலை காப்பியம் முழுவதும் பேசப்படுகிறது.*

**போர்க்கலை**

*கருடன் சிறகின் நிழலைக்கண்டு ஒடுங்கும் பாம்புபோல வேடர்களின் படை சீவகனைக் கண்டு ஒடுங்கியதை*

***" ஆழியா னூர்திப் புள்ளி***

***யவிந்த் வண்ணம் னஞ்சிற கொலியி***

***கோழி போற் குறைந்து நெஞ்சி***

***னறமென மறமும் விட்டார்" (பா. 449 )***

*எனக் காட்சிப்படுத்துகிறார் ஆசிரியர், காந்தருவதத்தையை மணம் முடிக்க வந்திருந்த மன்னரெல்லாம் ஒருங்கே திரண்டு சிவகனுடம் போரிடும் காட்சியை ஆளி ஒன்று களிற்றுப்பெருங் கூட்டத்தைக்கெடுக்கும் போலவும் புலி ஒன்று மான் கூட்டத்தை கெடுத்தது போலவும் உவமையாகக் கூறுகிறார் அதனை,*

***"செறியெயிற் நாளி வேழம்***
***பேரினஞ் ஒகுத்த தன்றே***
***யிறுபுலி யொன்று தானே***
***கலையின முடற்றிற் நன்றே" (பா.814)***

*என்ற வரிகளின் பதிவுசெய்துள்ளார் ஆசிரியர் சீவகன் யானையை அடக்கி வென்ற செய்தி இரண்டு இடங்களில் காட்டப்படுகின்றது. அசனிவேகம் அதிகம் என்னும் அரச யானையை அடக்கி (பா 985) வெற்றி கொள்கிறான், தடமித்தனை என்பவனது பட்டத்து யானையான "வளைய சந்தரம்" வெகுண்டதை அறிந்த அதையும் அடக்குகிறான் சீவகன் யானையைத் தன்வயப்படுத்தும் போது "அப்புதுஆது ஐ" (பா. 1834) என்ற யானை சீவகன் மொழியை பயன்படுத்திய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது சீவகன் விற்பனையில் சிறந்தவன் என்பதை,*

***"பட சில குழைய வாங்கிப்***
***பன்றியைப் அதைப்பற்றி தான்"***

*என்ற வரிகளின் பதிவு செய்துள்ளார்*

**ஒப்பனைக் கலை**

*காதிலே குண்டலம், பொன் னோலை கால்களிலே காற் சரி, சிலம்பு,கிண்கிணி அணிவித்து முகத்தைத்திங்கள் போல ஒளிரச் செய்து அநங்காமாலையை அரம்பைப் போல் சீவகன் ஒப்பனை செய்த காட்சியை*

***"திருவிலே சொரி ந்து மின்னுங்***
***குண்டலஞ் செமபொ னோலை***
***யுருவு கொண் மதிய மன்ன***
***வொளிமுகஞ்சுடர வாக்கிப்***
***பரியகஞ் சிலம்பு செம் பொற்***
***கிண்கிணி பாதஞ் சேர்த்தி***
***யரிவையை யரம்பௌ நாண***
***வணிந்தன் னனங்கன ன்னான்" (பா.674)***

*என்ற பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது.*

**சுண்ணப்பொடி ஆயும் திறன்**

*குணமாலை சுரமஞ்சரி இருவரிடத்திலும் உள்ள சுண்ணப்பொடியில் எது சிறந்தது என ஆயும் திறன் சிவகனிடம் ஒப்படைக்கப் பட்டப் போது குணமாலையில் சுண்ணமே சி றந்தது எனக் கூறினான். நன்மையுடைய சுண்ணம் பொருந்திய கோடையில் இடிந்தவை என்றும் மற்றவை குளிர்ச்சி உடைய மாரிக் காலத்தில் இடித்தவை என்றும் கூறி அததை நிருபிக்கும் முகமாக இருவரின்சுண்ணப்பொடியைப் விண்ணில் தூவ சுரமஞ்சரியின் பொடி கீழே விழுந்தது குணமாலையின் கண்ணத்தை வண்டுகளும் தேனீக்களும் கவர்ந்துண்டன*

*என்பதனை*

> ***வண்ண வார் சிலை வள்ளல் கொண்டாயிடை***
> ***விண்ணிற்துவயிட்டு டான்வந்து விழுந்தன***
> ***சுண்ண மங்கை சுரமைய மாலைய***
> ***வண்ண வண்டொடு தேனகவர்ந் துண்டவே'' (பா 894)***

*என்ற பாடல் அக்காட்சியை நம்கண்முன் நிறுத்துகின்றது இவ்வாறு அனைத்தும் கலைப் புலமையும் நிறைந்தவர் சீவகன் என்பதை பகைவனானா கட்டியங்காரனே.*

*கலைகளைத் தவிர தடமித்தன் என்னும் பாத்திரத்தின் வாயிலாக சமுத்திரிகாலட்ச ணத்தை அறியும் கலை, மலர் தொடுக்கும் கலை, என்ற கலைகளின் விரும்பவே சிந்தாமணி காணப்படுகிறது.*

*எல்லாப்பொருளும்இதன்பாலுளஎனும்திருக்குறளைப்போலஎல்லாக்கலைகளும்இவன் பாலுள என்பதற்கு இலக்கணமாகச் சீவகனைப் படைத்துள்ளார் காப்பிய ஆசிரியர். சீவகனின் பல்வேறு கலைதிறன்களே எட்டு பெண்களையும் மணப்பதற்குத்துணை செய்ததைமறுக்க இயலாது. மேலும் வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும, நாட்டிற்குத் துணையாக முடிசூட்டவும் இக்கலை அறிவேகாரணமாக அமைவதைகாப்பியம் முழுவதிலும் காண முடிகின்றது.*

**துணைநூல் பட்டியல்**

1. ***சீவகசிந்தாமணி,*** *பாவை பப்ளிகேஷன்ஸ், 142 ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை.*

**References**

*1. Sivakasinthamani, Pavai Publications, 142 Johnny John Khan Road, Raiyapet, Chennai-600 014*